

நாகையில் பூஜ்யக் கழிவு மைய திட்டத்தை மாரிமுத்து எம்.எல்.ஏ. தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் மாவட்ட கலெக்டர் தென்காசி ஜவகர், நகராட்சித் தலைவி தங்கப் பிள்ளை ஆகியோர் உள்ளனர்.

## "பூஜ்யக் கழிவுத் திட்ட மையம்"

# குப்பைகளை பயன்படுத்தி உரம் தயாரிக்கும் திட்டம்

# நாகையில் தொடக்கம்

நாகப்பட்டினம்,பிப்.11– குப்பைகளை பயன்படுத்தி, உரம் தயாரிக்கும் "பூஜ்யக் கழிவு திட்ட மையம்" நாகையில் தொடங்கப்பட்டுள்ளது.

### பூஜ்யக் கழிவு திட்ட மையம்

நாகை அரசு ஆஸ்பத்திரி பின்புறம் கட்டப்பட்டுள்ள பூஜ்யக் கழிவு மைய திட்ட தொடக்க விழா நேற்று நடைபெற்றது. விழாவில் நாகை நகர எக்ஸ்னோரா தலைவர்செல்வம் வரவேற்று பேசினார். விழாவில் மாவட்ட கலெக்டர் தென்காசி ஜவகர் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, நகராட்சி தலைவி தங்கப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து பேசியதாவது:–

இந்த எக்ஸ்னோரா அமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்யக் கழிவுமையம் இயற்கை உரத்தை தயாரிக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இயற்கை உரம் பயன்படுத்துவதால் விவசாயிகள் மிகுந்த பயன் பெற முடியும். இயற்கை உரத்தை பயன்படுத்திய சீர்காழி விவசாயி ஒருவர் ஏக்கருக்கு 80 மூட்டை நெல் அறுவடை செய்துள்ளார். கியூபாவில் முற்றிலுமாக இயற்கை உரமே விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் உலகில் கரும்பு உற்பத்தியிலும், விவசாயத்திலும் கியூபா முதல் இடத்தை வகிக்கிறது.

### மின்சாரம் உற்பத்தி

வேளாண் துறைக்கு உதவி செய்யும் வகையாக பூஜ்யக்கழிவு மையம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. நாகையில் தற்போது சுமார் ரூ.10 கோடி செலவில் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோல சுனாமி குடியிருப்புகளில் சாலைகளை சீரமைக்க ரூ.5 கோடி ஒதுக்கீடுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நாகை நகர மேம்பாட்டுக்காக ரூ.33 கோடி செலவில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணியும் விரைவில் நடைபெற உள்ளது. துறைமுக கால்வாய்யை தூர்வாருவதற்கு ரூ.5 கோடி செலவிடப்படுகிறது. மேலும் நாகையில் மருத்துவ கல்லூரி அமைப்பதற்கு வேண்டி அனுமதி வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விழுந்தமாவடி பகுதியில் 2 மெகாவாட் மின்சர்ரம் உற்பத்தி செய்யும் வகையில் பெரிய அளவிலான மின் திட்டம் நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த திட்டத்தின் மதிப்பீடு ரூ.17 ஆயிரம் கோடி ஆகும். இவ்வாறு நாகை நகரத்தின் மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இந்நிலையில் எக்ஸ்னோரா அமைப்பின் மூலம் பூஜ்யக்கழிவு மேலாண்மை மேற்கொள்ளப்படுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயம். இவ்வாறு அவர் பேசினார்.

### சுற்றுச்சூழல் மேம்பாடு

விழாவில் கலெக்டர் தென்காசி ஜவகர் பேசியதாவது:–

குப்பைகள் அதிகம் கொட்டப்படுவதால் சுகாதாரக்கேடுகள் ஏற்படும் நிலைமை உள்ளது. பூஜ்யக் கழிவு திட்டத்தின் மூலம் பிளாஸ்டிக் குப்பைகள் மற்றும் மக்கும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அவை கையாளப்படுவதால் சுகாதாரத்தினை எளிமையான முறையில் மேம்படுத்த முடியும். தற்போது எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் குப்பைகள் அதிகரித்து வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பிளாஸ்டிக் குப்பைகளை உண்டு கால்நடைகள் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது.

நாகை மாவட்டம் சுனாமியின் போது 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்களை இழந்தது. பின்னர் தொண்டு நிறுவனங்கள் உதவியால் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது 48 தொண்டு நிறுவனங்கள் 17 ஆயிரம் வீடுகளை கட்டி வருகின்றன. இதில் 1 பகுதி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு,பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### முதல் இடம்

தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து அரசு நல்லமுறையில் செயல்படுவதில் நாகை மாவட்டம் முதல் இடம் வகிக்கிறது. பல்வேறு தொண்டு நிறுவனங்களின் பார்வையால் உலகறிந்த மாவட்டமாக நாகை விளங்குகிறது. தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் நாகை நகராட்சியின் 12, 15 மற்றும் 16 ஆகிய வார்டுகளில் பூஜ்ய கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைத் தொட்டிகள் கொடுக்கப்படுகின்றன. இதில் மக்கும், மக்கா குப்பை என தரம் பிரித்து பொது மக்கள் கொடுக்க வேண்டும். அவற்றை எக்ஸ்னோரா அமைப்பினர் சேகரித்து பூஜ்யக்கழிவு மையத்திற்கு எடுத்து வந்து, பின்னர் மண்புழு உரம் தயாரிப்பதற்கு பயன்படுத்துகின்றனர். இந்த நல்ல திட்டம் நாகையின் பிற பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் நாகை நகராட்சி துணைத் தலைவர் மாரிமுத்து, எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் துணைத் தலைவி மங்களம் பாலசுப்பிரமணியன், திட்ட இயக்குநர் சந்திரசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி, தஞ்சாவூர் 11-2-2007